**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 318/2022**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவகி | தொழில் | |
| க/பெ | ஏழுமலை | வயது | |
| ஊர் | | தேதி | 08.07.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (08.07.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ளவிவரங்களை படித்து புரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரி . 1வது பிரதிவாதி எனது கணவரின் அண்ணன் மனைவி . 2வது பிரதிவாதி மகாலட்சுமி என்பவர் 1வது பிரதிவாதியின் மகள் என்றால் சரி. 3 வது பிரதிவாதி 1வது பிரதிவாதியின் மருமகன் மற்றும் 2 வது பிரதிவாதியின் கணவர் என்றால் சரி . எனது மாமனார் மாமியார் பெயர் முனுசாமி கிருஷ்ணம்மாள். ஆண்பிள்ளைகள் 3 பேர்கள் பெண்பிள்ளைகள் 2 பேர்கள் அங்காளன் , தனபாலன், சரோஜினி, ஏழுமலை, பார்வதி. எனது மாமனார் எனது திருமணத்திற்கு முன்பு இறந்துவிட்டார். எனது மாமியார்தான் குடும்பத்தை பராமரித்து வந்தார்என்றால் சரி . முனுசாமி, கிருஷ்ணம்மாள் ஆகியோருக்கான சொத்துக்கள் எந்த எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் முடியாது . அங்காளன் தனபால் ஏழுமலை ஆகியோருடன் எனது மாமியார்உயிருடன் காலத்திலோ அல்லது இறந்தபிறகு சொத்துக்கள் குறித்து ஏதாவது உடன்படிக்கை ஏற்படுத்தி கொண்டோமா என்றால் எனது மாமியார் உயிருடன் இருக்கும்போதே சொத்துக்களை பிரித்து கொண்டோம் . எந்தெந்த சர்வே எண்ணில் எந்த எந்த விஸ்திரணம் பாக பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சர்வே எண் தெரியவில்லை 4 இடங்களில் சொத்து இருந்தது . 4 சொத்துக்களுக்கான

ஆவணங்களை நான் பாக்கவில்லை . வா.சா.ஆ 2 எந்த எந்த சொத்துக்கள் குறித்து எழுதப்பட்டது என்றால் சர்வே எண் 81/40 3 செண்ட் நிலத்திற்காக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் . மா.சா.ஆ 2 யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனது மகள் ஜான்சி என்பவர் பால்சிங் , சாருசுந்தர்சிங், ஜெயதிப் சிங் , சந்தீப் சிங் ஆகியோர்களுக்கு கொடுத்திருந்தார். ஆவணத்தில் நான் விற்பனை செய்ததாகவோ அல்லது வாங்கியதாகவோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் விற்பனை செய்ததாக கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் நான் , மற்றும் 5 நபர்களுடன் சேர்ந்து வாங்கியதாகவும் நான் மற்றும் 6 நபர்க-ளுடன் சேர்ந்து விற்பனை செய்தததாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ 2 க்கான மூல ஆவணமாக நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தேன் என்றால் எனது கணவர் பெயரில் இருந்த பட்டாவை கொடுத்தோம். எனது கணவர் பெயரில் எந்த பட்டாவும் இல்லை என்றாலும் கிராம நிர்வாக அலுவலரிடம் அபதிவேடு நகலை பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல பட்டாவை கொடுத்துள்ளேன். வா'சா.ஆ 2 ல் அ பதிவேட்டின் நகல் தான் உள்ளது என்றால் அதை கொடுத்து தான் பட்டாமாற்றிக்கொண்டோம் . அ பதிவேட்டை வைத்து பட்டா மாற்றிக்கொண்டேன். எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்கை எனதுகணவர் பெயரில் இருந்த அ பதிவேட்டின் வாயிலாக பட்டா பெற்று அதன் பேரில் வா .சா.ஆ 2 யை ஏற்படுத்திகொண்டோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் நான் இன்னொரு' படித்து விட்டு வருகிறேன்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram